# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

**முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண்: 213/மா/2024

நாள்: 06.03.2026

கோ. கோவிந்தராஜ்
சென்னை–83 --- முறையீட்டு மனுதாரர்

மண்டல அலுவலர், மண்டலம்–10
பெருநகர சென்னை மாநகராட்சி --- எதிர்மனுதாரர்

சென்னை–600 083, அசோக்நகர், 15–வது தெரு, கதவு எண் 22/43 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. கோ. கோவிந்தராஜ் என்பவரின் 21.10.2024 நாளிடப்பட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 21.10.2024 அன்று பெறப்பட்டு 213/மா/2024 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது:

**ஆணை**

சென்னை–600 083, அசோக்நகர், 15–வது தெரு, கதவு எண் 22/43 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. கோ. கோவிந்தராஜ் என்பவர் தனது 21.10.2024 நாளிட்ட மனுவில் இணைத்துள்ள பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10–ன் உதவி ஆணையருக்கு முகவரியிட்டு 15.07.2024 நாளிட்ட மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்:-

> "நான் வசிக்கும் அலுவலக வீட்டிலிருந்து சுமார் 300 மீட்டர் தொலைவில், SP 6, LGS காலனி, 5வது அவின்யூ என்ற முகவரியில் பழைய கட்டிடத்தை இடித்து சுமார் 10,000 சதுரடியில் 3 தளத்திற்கு மேல் கட்டிடம் கட்டப்பட்டு பணிமுடியும் தருவாயில் உள்ளதை இம்மனுவுடன் இணைக்கப்பட்ட புகைப்படத்தில் காணலாம். இக்கட்டிட உரிமையாளர் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான நடைப்பாதையில் சம்ப் அமைத்துள்ளதையும், நடைப்பாதையை ஆக்கிரமித்து Step & Ramp அமைக்க கட்டுமான பொருட்களை குவித்துள்ளதையும் இம்மனுவுடன் இணைக்கப்பட்ட புகைப்படத்தில் காணலாம். ஆக்கிரமிப்பை தடுத்து நிறுத்த அகற்ற இம்மனு அளிக்கப்படுகிறது." எனத் தெரிவித்துள்ளார்.

2. மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ 18.11.2024 நாளிட்ட அறிவிப்பு மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10–ன் மண்டல அலுவலரிடம் கோரப்பட்டது மற்றும் 07.04.2024 நாளிட்ட நினைவூட்டு கடிதம் அனுப்பப்பட்டது. அறிக்கை ஏதும் பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 10, மண்டல அலுவலரிடமிருந்து கிடைக்கப் பெறவில்லை.

3. எனினும், இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 09.12.2025 அன்று நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 30.10.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

4. எதிர்மனுதாரரான பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10–ன் அலுவலகத்திலிருந்து உரிய அலுவலர் அன்று ஆஜராகாத காரணத்தினால் மேற்கண்ட மனுதாரரின் மனு தொடர்பாக, மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 09.01.2026 அன்று நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 22.12.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் 09.01.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

"சென்னை அசோக்நகர், 5வது அவின்யூ, LG காலனி கதவு எண்.SP 6, என்ற முகவரியில் உள்ள கட்டிடத்தை இடித்து சுமார் 10,000 சதுரடியில் மூன்று தளத்திற்கு மேல் கட்டிடம் கட்டிய அக்கட்டிடத்தின் உரிமையாளர் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான நடைபாதையை ஆக்கிரமித்து Step & Ramp கட்டியுள்ளார். இது குறித்து கட்டிடம் கட்டப்பட்ட ஆரம்ப நிலையில் புகார் அளித்ததன் அடிப்படையில் நடவடிக்கை எடுத்திருந்தால் ஆக்கிரமிப்பினை தடுத்து இருக்கலாம். ஆனால், இதுவரை பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10ன் அலுவலகத்தால் நடவடிக்கை எடுக்கவில்லை.

எனவே, பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான நடைபாதையை ஆக்கிரமித்து கட்டியுள்ள Step & Ramp அகற்றிட பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு உத்தரவிட இம்முறை மன்ற நடுவர் அவர்களை பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.".

6. எதிர்மனுதாரர் தரப்பில் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10–ன் இளநிலை பொறியாளர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்பு 09.01.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளனர்:–

"மனுதாரர் குறிப்பிட்டுள்ள கட்டிடம் கள ஆய்வு செய்யப்பட்டது. கள ஆய்வில் மனுதாரர் குறிப்பிட்ட கட்டிட கதவு எண் SP6 முன் மனுதாரர் குறிப்பிட்டவாறு எவ்வித ஆக்கிரமிப்பும் இல்லை. ஆனால் மனுதாரர் விசாரணையில் காண்பித்த புகைப்படத்தில் உள்ள கட்டிடத்தின் கதவு எண் SP5 ஆகும். அங்கு ஐந்து அடி அளவுக்கு ஆக்கிரமிப்பு இருந்தது. அதில் இரண்டு அடி அகற்றப்பட்டு விட்டது. மீதமுள்ள ஆக்கிரமிப்பு இம்மாத இறுதிக்குள் அகற்றப்படும் என்ற விவரத்தினை முறைமன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்."

7. முறையீட்டு மனுதாரரின் மனு, வாக்குமூலம் மற்றும் எதிர்மனுதாரர் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10–ன் மண்டல அலுவலர் சார்பாக விசாரணைக்கு ஆஜரான இளநிலை பொறியாளரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:

சென்னை, அசோக்நகர், 5வது அவின்யூ, LGS காலனி கதவு எண் SP6, என்ற முகவரியில் உள்ள கட்டிடத்தை இடித்து சுமார் 10,000 சதுரடியில் மூன்று தளத்திற்கு மேல் கட்டப்பட்ட கட்டிடத்தின் உரிமையாளர் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான நடைபாதையை ஆக்கிரமித்து Step & Ramp கட்டியுள்ளார் என்பதும், இது குறித்து கட்டிடம் கட்டப்படும் ஆரம்ப நிலையிலேயே புகார் அளித்தும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10ன் அலுவலகத்தால் நடவடிக்கை எடுக்கவில்லை என்பதும், பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான நடைபாதையை ஆக்கிரமித்து

கட்டியுள்ள Step & Ramp அகற்றிட பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு உத்தரவிடமாறு கோரியிருப்பது மனுதாரரின் மனு மற்றும் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

மனுதாரர் குறிப்பிட்ட மேற்கண்ட கட்டிடத்தின் கதவு எண் SP6–ல் கள ஆய்வு செய்ததில் மனுதாரர் குறிப்பிட்டவாறு இக்கட்டிடத்திற்கு முன்பு எவ்வித ஆக்கிரமிப்பும் இல்லை என்பதும், மனுதாரர் விசாரணையில் காண்பித்த புகைப்படத்தில் உள்ள கட்டிடத்தின் கதவு எண் SP5 என்ற கட்டிடத்தில் ஐந்து அடி அளவுக்கு ஆக்கிரமிப்பு இருந்ததில், இரண்டு அடி அகற்றப்பட்டதாகவும். மீதமுள்ள ஆக்கிரமிப்பு இம்மாத இறுதிக்குள் அகற்றப்படும் என்பதும் எதிர்மனுதாரர் தரப்பில் விசாரணைக்கு ஆஜரான பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10–ன் இளநிலை பொறியாளரின் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில், சென்னை, அசோக்நகர், 5வது அவின்யூ, LGS காலனி கதவு எண் SP5 என்ற கட்டிடத்தில் ஐந்து அடி அளவுக்கு ஆக்கிரமிப்பு இருந்ததில், இரண்டு அடி அகற்றப்பட்டு, மீதமுள்ள ஆக்கிரமிப்பு ஜனவரி 2026 இறுதிக்குள் அகற்றப்படும் என்று தெரிவித்துள்ள நிலையில், இப்புகார் குறித்து மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை விவரம் குறித்து அறிக்கை சமர்ப்பிக்க பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10–ன் மண்டல அலுவலரை அறிவுறுத்துமாறு, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது.

2026–ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 06–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணைவெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

(1) திரு. கோ. கோவிந்தராஜ்,
எண் 22/43, 15வது தெரு,
அசோக் நகர், சென்னை–600 083.

(2) ஆணையர்,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை–600 003.

(3) மண்டல அலுவலர்,
மண்டலம் 10,
பெருநகர சென்னை மாநகராட்சி,
எண் 64 N.S.K. சாலை, கோடம்பாக்கம்,
சென்னை–600 024.

(4) கண்காணிப்பாளர்/ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
மழைநீர் வடிகால் துறை,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை–600 003.

<u>நகல்:</u>
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இ.கோ. / உதிரி.

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் சென்னை–600 032

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

11/3/26
செயலாளர்.

11/3/26